Crl.Misc.39

D E P O S I T I O N   O F   W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. CC.169/2023

**P.W**. 2(LW6)

| | |
|---|---|
| Name | : திரு.அறிவழகன் |
| Father/Husband Name | : திரு. |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் உள்ளார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.05.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் இதற்கு முன்பு கூவத்தூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்று தற்போது செங்கல்பட்டில் குடியிருந்து வருகிறேன்.

2. கடந்த 12.07.2023ம் தேதி கல்பாக்கம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது 13.00 மணியளவில் கலோஷா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.119/2023 இ.த.ச.பிரிவுகள் 294(பி), 384, 506(ii) கீழ் வழக்கு பதிவு செய்தேன். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. பின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் பாண்டியன், ராஜசேகர் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும்

மாதிரி வரைபடம் தயார் செய்தேன். ( **பார்வை மகசர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** **(மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்பு சாட்சிகள் காலேஷா, பாபு, சரவணன், மற்றும் பார்வை மகசர் சாட்சிகளான பாண்டியன், ராஜசேகர் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. இவ்வழக்கின் எதிரியான சரண்ராஜ் என்பவரை 12.07.2023 மாலை 15.00 மணியளவில் இளையனார் குப்பம் ஜங்சன் அருகே கைது செய்தேன். அவரிடமிருந்து வழக்கு சொத்தான பேனா கத்தி மற்றும் ரூ.450/- பணத்தை சாட்சிகள் பாண்டியன், ராஜசேகர் ஆகியோர் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினேன். பின்னர் வழக்கு சொத்தான பேனா கத்தி மற்றும் ரூ.450/- பணத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன். **(கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.5 ஆகவும், படிவம் 91 அ.சா.ஆ.6 ஆகவும், பேனா கத்தி அ.சா.பொ.1 ஆகவும், ரூ.450/-க்கான புகைப்படம் அ.சா.பொ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் எதிரியை நீதிமன்றக் காவலுக்குட்படுத்தினேன்.

**5.** இத்துடன் விசாரணையைமுடித்து எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 294(பி), 384, 506(ii) ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையில் அ.சா.1 வழக்கு சம்பவம் குறித்து வாக்குமூலம் அளித்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை,**

நான் சொன்ன தேதி, நேரத்தில் அ.சா.1 றிடம் புகார் எதுவும் நான் பெறவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எதிரியை நான் சொன்ன தேதியில், சொன்ன

இடத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வழக்கு சொத்தான பேனா கத்தியின் நீளம் என்ன இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் ரூ.450/- பணத்தை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும், எதிரி மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. புள்ளிவிவர கணக்கிற்காக எதிரி மீது பொய்யாக ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.